# 10–ஆம் நூற்றாண்டு தேவி சிற்பம் கும்பகோணம் அருகே கண்டெடுப்பு

**கும்பகோணம், அக். 16:** கும்பகோணம் அருகே கோனேரிராஜபுரத்தில் 10-ஆம் நூற்றாண்டு கால தேவி சிற்பம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.



கோனேரிராஜபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட 10-ஆம் நூற்றாண்டு தேவி சிற்பம்.

இது குறித்து கும்பகோணம் வட்டார வரலாற்று ஆய்வுச் சங்க நிறுவனரும், வரலாற்று ஆய்வாளருமான ஆ.கோபிநாத் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டத்துக்குட்பட்ட கோனேரிராஜபுரத்தில் ஓய்வுபெற்ற கிராம நிர்வாக அலுவலர் நாராயணன், வரலாற்று ஆய்வாளர் திருநல்லம் க.சுவாமிநாதன் கொடுத்த தகவலின்படிகள ஆய்வு மேற்கொண்டோம்.

இதில், கோனேரிராஜபுரம் வடக்குத் தெருவயல் வெளியை ஒட்டிய வாய்க்காலில் கிடந்த கல்லை எடுத்து தூய்மைப்படுத்தியபோது, இது மூத்த தேவி என அடையாளம் காணப்பட்டது.

வரலாற்றில் திருநல்லம் என அழைக்கப்பட்ட இந்த ஊரில் நடராஜர் கோயில் இருந்தது. இந்தக் கோயிலிலிருந்து ஏறத்தாழ 1.5 கி.மீ. தொலைவில் வயல்வெளியில் இந்தச் சிலை கிடைத்திருப்பது சிறப்பானது. 3.5 அடி உயரமும், 2.5 அடி அகலமும் கொண்ட சோழர் காலத்தைச் சேர்ந்த இந்தச் சிலையில் மாந்தன், மாந்தியுடன் அன்னை தேவி காட்சி தருகிறார். வசிகரமான முகம், தலையில் கரண்ட மகுடம், காதில் குழைகள், கழுத்தில் கண்டிகை, சவடி, சரப்பளி ஆகியவை அணிந்து அமர்ந்த நிலையில் உள்ளார். சிலையின் மார்புப் பகுதி சிதைவுக்குள்ளாகியுள்ளது.

இவருக்கு இடது பக்கத்தில் மகன் மாந்தன் சன்ன வீரம் தரித்தும், வலது பக்கத்தில் மகள் மாந்தி சுகாசனத்தில் அமர்ந்த கோலத்திலும் உள்ளனர். மாந்தியின் முகமும் சிதைவுக்குள்ளாகி உள்ளது. மூத்த தேவியின் சின்னமான காக்கைக் கொடி மாந்தியின் அருகில் காணப்படுகிறது.

பல்லவர்களின் ஆட்சியில் தமிழர்களின் தாய் தெய்வமாக மூத்த தேவி வழிபாட்டில் இருந்துள்ளார். பிற்கால சோழர்கள் காலத்திலும் சேட்டை என்ற பெயரில் மூத்த தேவி வழிபாடு நடைபெற்றுள்ளதைக் கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன.

இச்சிலை காலப்போக்கில் கோயில் வழிபாட்டிலிருந்து மறைந்து, இப்போது வயல் சார்ந்த பகுதிகளில் காணப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நீரின்றி இயங்காது உலகு!

மூன்றாம் உலகப் போர் மூண்டால் அது நீருக்காகத்தான் இருக்கும் என வல்லுநர்கள் கணித்துள்ளனர். மொத்த நிலப் பரப்பில் 75 விழுக்காடு நீரால் சூழ்ந்துள்ளது. அதில் கடலோடு சார்ந்த உப்புநீர் 97.5 விழுக்காடு. அருந்துவதற்குரிய தூயநீர் 2.5 விழுக்காடு மட்டுமே. இயற்கை வளத்திற்கேற்ப, நீரின் அளவு நாட்டுக்கு நாடு, கண்டத்திற்குக் கண்டம் வேறுபடும். நீர்ப்பற்றாக்குறை உள்ள நாடுகள் மிகுதியாக நீர் கொண்ட நாடுகளோடு போர் தொடுக்கக் கூடும்.

10 பில்லியன் டன் தூய நீரை அன்றாடம் உலகினர் பருகி வருகிறார்கள். 2023-ஆம் ஆண்டில் மட்டும் 3 லட்சம் கோடி டன் நீரைப் பயன்படுத்தி இருக்கிறோம். அந்த அளவிற்குத் தொடர்ந்து நீர் கிடைக்குமா என்பது ஐயமே. மக்கள்தொகைப் பெருக்கத்தால் நீருக்கான தேவை 60 ஆண்டுகளில் இரு மடங்காகியுள்ளது. தற்போது உள்ள நிலைமையில் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் வளர்ந்து வரும் நாடுகளில் நீர் ஆதாரம் மிகவும் குறைந்துள்ளது.

17 நாடுகள் அதிக நீர்ப்பற்றாக்குறையில் உள்ளதாக நீர் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 50 நாடுகளில் வாழும் 30 % மக்கள் மிகுந்த நீர் பற்றாக்குறையில் இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது என யுனிசெஃப் எச்சரித்துள்ளது. மேலும், 2025-ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 50 % மக்கள் போதிய நீர் இன்றி வாழும் நிலை ஏற்படும் என்று கணித்துள்ளனர்.

நீருக்காக 70 கோடி மக்கள் 2030-இல் இடம் பெயர்வர் எனவும் நிபுணர்கள் கூறியுள்ளனர். 2040-ஆம் ஆண்டில், நான்கில் ஒரு குழந்தை நீருக்காக மிகப் பெரிய சவாலைச் சந்திக்க வேண்டியிருக்கும் என வல்லுநர்கள் கவலைப்படுகின்றனர்.

இந்தியா உலக நீர்வளத் தரவரிசையில் 133-ஆம் இடம் வகிக்கிறது. நீர்ப்பற்றாக்குறையுடன், 76 விழுக்காட்டு மக்கள் தண்ணீர் பஞ்சத்தோடு வாழ்கின்றனர் என புள்ளிவிவரம் கூறுகிறது. தனிமனிதனுக்குத் தேவைப்படும் நீர் ஆண்டுக்கு 1,700 கியூபிக் மீட்டர் ஆகும். தற்போது கிடைக்கும் நீரின் அளவு 1,121 பில்லியன் கியூபிக் மீட்டர் மட்டுமே. இதன் தேவை 2025-இல் மேலும் 22 விழுக்காடாகவும், 2050-இல் 32 விழுக்காடாகவும் அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர். எனவே வரும் ஆண்டுகளில் நீருக்கான பற்றாக்குறை இன்னும் அதிகமாகவே இருக்கும் எனத் தெரிகிறது.

ஒரு டன் பயிர் விளைச்சலுக்கு 1,000 டன் நீர் செலவாகிறது. போதிய நீர் பாயாது போனால், விளைச்சல் குறையும். தொழில்களுக்கு நீர் அளிக்கப்படாவிட்டால், உற்பத்தியைப் பெறுவது கடினம். ஒரு மெட்ரிக் டன் கோதுமைக்கு 1,600 கியூபிக் மீட்டர் தேவைப்படுகிறது. நம் கண்களுக்குப் புலப்படாது பயன்படுத்தப்பட்டு வரும் நீரின் அளவு பன்மடங்காக உள்ளது.



முனைவர் கு. பன்னீர்செல்வம்

வேளாண்மை சார்ந்த தொழில்களுக்குப் பயன்படுத்தும் 75 முதல் 90 விழுக்காடு நீருக்குப் பதிலாக, பசுமைப் புரட்சி திட்டத்தின் மூலம் 50 விழுக்காடு நீரே போதுமானது. அதன் மூலம் 40 முதல் 60 விழுக்காடு பயிர் விளைச்சலைப் பெருக்கலாம் என்கின்றனர்.

நிபுணர்கள், சொட்டுநீர்ப் பாசனம், சுழற்சிப் பயிர் விவசாயம், அதிக விளைச்சல் தரும் பயிர் விளைச்சல், கூட்டுப் பண்ணை விவசாயம், ஊடு பயிர், இயற்கை உரம் போன்றவற்றை அறிமுகம் செய்தனர். அத்திட்டம் முழுமையாகச் செயல்படாதலால் நம்மால் தன்னிறைவு பெற முடியவில்லை. நீர்ப் பயன்பாட்டிலும் நாம் சிக்கனமாக இல்லை.

அமெரிக்கா இத்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுத்தது. 34 விழுக்காடு நீரை மட்டும் பயன்படுத்தி வேளாண்மையில் வளர்ச்சியடைந்து மூன்றாம் இடத்தில் இருக்கிறது. அங்கு குறைந்த ஆள்களைக் கொண்டு பெரும் விளைச்சலைப் பெறுகின்றனர். ஆஸ்திரேலியாவில் 37 விழுக்காடு நீரைப் பயன்படுத்தி, அதில் 28 விழுக்காடு வரை நீர்ப் பாசனமாக்கி வேளாண்மையில் தன்னிறைவு பெற்று, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளனர்.

**நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டிய தருணம் இது. இதற்கான நடவடிக்கை எடுக்காவிடில், தென்னமெரிக்கா போன்ற நாடுகளில் 2018 -இல் தண்ணீர் பற்றாக்குறைக்கு எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைபோல் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் நீர்தான் அளிக்க முடியும் என்ற நிலை உருவாவது தவிர்க்கவியலாதது.**

நீர் ஆதாரத்தைப் பெருக்கவும், பாதுகாக்கவும் வேண்டிய தருணம் இது. இதற்கான போர்க்கால நடவடிக்கை எடுக்காவிடில், தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் 2018 -இல் தண்ணீர் பற்றாக்குறைக்கு எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைபோல் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் நீர்தான் பகிர்ந்தளிக்க முடியும் என்ற நிலை உருவாகிவிடும்.

எத்தியோப்பியாவில் உள்ளப்பல்கலைக் கழகத்தில் நான்கு நாள் நடந்த கருத்தரங்கிற்கு நபர் ஒருவருக்கு எட்டு லிட்டர் நீர்தான் கொடுக்க முடிந்தது. இங்கு நாம் நாள் ஒன்றுக்கு 135 லிட்டர் நீர் நுகரமுடிகிறது. ஆனால் இதுவும் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கவில்லை. அதற்கு நீதி மன்றத்தையும், மேலாண்மை குழுவையும் அணுகி தீர்ப்புக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது.

இயற்கை அருளியது ஐம்பெரும் பூதங்கள். அதில் மனித இனம் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியது நீர் வளத்திற்குத்தான். நிலமும், ஆகாயமும் பரந்து விரிந்தவை. நிலம், உழைக்கும், உழைப்புக்கும் உறுதுணையாக இருக்கும். ஆகாயத்தை மாசுபடாது, புகை மற்றும் வெப்பமண்டலமாக்காமல் இருந்தால் போதுமானது. மனித இனத்தின் ஈடுபாடு நீர் வளம் காக்கவே பெரிதும் தேவைப்படுகிறது. உலக சுகாதார அமைப்பின் ஆய்வின்படி ஜி 20 அமைப்பு நாடுகளில் உள்ள மிகவும் மாசுபட்ட 20 நகரங்களில் 13 நகரங்கள் இந்தியாவில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

நிலத்தடிக்கும், நில மேற்பரப்பிற்கும் ஆண்டுதோறும் பொய்யாது மழை பெய்தால், ஒன்றுக்கொன்று சுழன்று நீர் வளம் போதுமான அளவிற்கு மக்களின் பயன்பாட்டிற்கும், பல்லுயிர்களின் ஜீவாதாரத்திற்கும், வேளாண்மை பயிர் விளைச்சல்களுக்கும், தொழில் உற்பத்திக்கும் உறுதுணையாக இருந்து, நாடுகளுக்கு வளத்தையும், செழிப்பையும், பொருளாதார முன்னேற்றத்தையும் கொடுக்கும்.

ஆனால் அண்மைக்காலமாக அது நடைபெறவில்லை. மாறாக நிலத்தடியில் உள்ள 437.6 பில்லியன் கியூபிக் மீட்டர் நீரில், நம் பயன்பாட்டிற்கு 239.16 பில்லியன் கியூபிக் மீட்டர் (55 விழுக்காடு) எடுக்கிறோம். நிலத்தடி நீரை முடியும் அளவு பம்புகள் மூலம் ஆழமாக நிலத்தைத் தோண்டி நீரை எடுத்ததால் 45 விழுக்காடு மட்டுமே மிஞ்சுகிறது. இந்தப் பற்றாக்குறையைச் சரிசெய்ய கடல் நீர் உள்வாங்குகிறது. குடிநீராக உள்ள 50 விழுக்காடும், வேளாண்மைக்குமாகப் பயன்படும் 43 விழுக்காடும் உப்புநீராகிறது.

நிலத்தடியில் உள்ள கனிம வளங்கள், பாறைகள், கடல் நீருடன் கலந்து, மாசுபடிந்த நீராகி, உயிரினங்களுக்கு உற்ற நீராக இல்லாமல் போகின்றது. உலக சுகாதார அமைப்பின் அறிக்கைப்படி, நீரினால் பரவும் நோய்களினால் 80 விழுக்காடு மக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இதனைப் பயன்படுத்தி இயற்கைக் கொடையான நீரை வணிகப்பொருளாக்கியுள்ளனர். நிலத்தடி, கண்மாய், ஏரி மற்றும் நீர்நிலை நீரை அள்ளி எடுத்து, குடிநீர்ப்புட்டிகள், நிறுவனங்கள், தொழிற்சாலை, மருத்துவமனை, பள்ளி, கல்லூரிகள் போன்ற இடங்களில் விற்று வருகின்றனர். மினரல் நீர் ஆலைகள் புற்றீசல்களாகப் பெருகியுள்ளன. கேன்களில், பாட்டில்களில் நிரப்பப்பட்டும் நீர் விற்பனையாகிறது. இது நீர்ப் பற்றாக்குறையினை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

அக்காலத்தில் நீரைச் சேமிப்பதற்கு ஏரி, குளம், வாய்க்கால், கண்மாய் போன்றவை ஆறு லட்சம் இருந்ததாகப் புள்ளிவிவரம் கூறுகிறது. அரசின் பிரிதொரு அறிக்கையில், 38,486 நீர் சேமிக்கும் இடங்களை அரசும், தனியாரும் கையகப்படுத்திவிட்டதாகத் தெரிவிக்கிறது. நிலத்தடி நீரையும், மழைநீரையும் சேமிக்க வேண்டிய நீர்நிலைகள் மாசுபடிந்து, தூர்வாராது பராமரிப்பின்றி உள்ளன. இதனால், நமக்குக் கிடைக்கும் நீரைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 122 வருடங்களில் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் குறைந்த அளவு மழை பெய்துள்ளது. ஜூன் - ஆகஸ்ட் மாதங்களில் சராசரியாக பெய்யும் மழையும் குறைந்துள்ளது. தென் மேற்கு மழைகாலம் முடிவு உள்ளது. மழை குறைவாகப் பெய்தமையாலும் நீர் வறட்சி ஏற்பட்டது. வெப்பச் சலனம், மாறிவரும் தட்பவெப்பநிலை, காற்றில் குறைந்துள்ள ஈரம் போன்றவற்றால் பெருமளவு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

நில மேற்பரப்பில் மிஞ்சியுள்ள நீர் நிலைகளையாவது மக்களின் உதவியோடு பாதுகாக்காது போனால், நாமும், எதிர்கால சந்ததியினரும் நீர் கிடைக்காமல் பெரும் இன்னலுக்கு உள்ளாக நேரிடும். மேலும் மக்கள் வசிக்கும் சுமார் 34 கோடி வீடுகளிலும் நீர் சேகரிப்பு ஆகுவதற்கான வழிமுறைகள் அமைத்தால் ஒழிய நீர் பற்றாக்குறை தீராது.

மக்கள் உபயோகிக்கும் நீரில் 25 விழுக்காடு கசிவால் வீணாவதாகக் கண்டுபிடித்துள்ளனர். நீரைப் பயன்படுத்துவதிலும் நம்மிடம் சிக்கனமில்லை. தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தும் முறையைக் காலங்காலமாகப் பின்பற்றி வருவதால், விளைவுகள் மோசமாகி வருகின்றன.

வேளாண்மையில் நீர்ப்பாசன முறைகளுக்காக பல திட்டங்கள் அறிமுகமாகியும், சொட்டுநீர் பாசனமுறை, ஊடு பயிர் விளைச்சல், கூட்டு விவசாயப் பண்ணை போன்றவை பெரிய அளவில் நடைபெறவில்லை. 85 விழுக்காடு நீர் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

தொழிற்சாலைகள், குளிர்பானம் தயாரிக்கும் பெருநிறுவனங்கள் லாபநோக்கில், கணக்கின்றி நீரைப் பயன்படுத்துகின்றன. இவை பெரும் பாதிப்பையும், பற்றாக்குறையையும் ஏற்படுத்தும் என நிபுணர்கள் எச்சரித்தும் பயனில்லை. நீர்ப்பற்றாக்குறை எனும் சவாலை சமாளிக்க ஒவ்வொரு குடிமகனும் முயற்சி எடுக்க வேண்டியது அவசியம்.

கட்டுரையாளர்:
**பொருளாதார நிபுணர்.**

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# புதிய இந்தியாவின் எழுச்சி!

சர்வதேச அரங்கில் இந்தியா வல்லரசாக உயர்ந்து வருவதற்கான அறிகுறியை வெளிப்படுத்தி இருக்கிறது, சீனாவின் ஹாங்செள நகரில் நடந்த 19-ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி. 'இந்த முறை 100' என்கிற இலக்குடன்தான், ஹாங்செள ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்குக் கிளம்பியது இந்திய அணி. 1951-இல் புதுதில்லியில் நடந்த முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் 51 பதக்கங்கள் பெற்று பதக்கப் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது. எனினும், இந்தியா அதிகமான பதக்கங்களை வென்றிருப்பது நடந்து முடிந்த 19-ஆவது போட்டியில்தான்.

ஆசிய கண்டத்தில் வல்லரசாக உருவாகி இருக்கும் சீனா 201 தங்கப்பதக்கம் உள்பட 383 பதக்கமும், ஜப்பான் 52 தங்கம் உள்பட 188 பதக்கமும், தென்கொரியா 42 தங்கத்துடன் 190 பதக்கமும் வென்றன என்றால், அதற்கு அடுத்தாற்போல இந்த முறை இந்தியா 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் என்று 107 பதக்கத்துடன் நான்காம் இடத்தைப் பிடித்திருக்கிறது. இந்த முறை நாம் அடைந்திருக்கும் வெற்றி பல சாதனைகளை உள்ளடக்கியது.

107 பதக்கம் என்பது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா பெற்றிருக்கும் அதிகபட்ச எண்ணிக்கை என்பது ஒருபுறம் இருக்கட்டும். முதல் முறையாக மூன்றிலக்கப் பதக்க எண்ணிக்கையைத் தாண்டி இருக்கிறோம். நான்காவது இடத்தைப் பிடித்திருக்கிறோம். ஒன்றிரண்டு விளையாட்டுகள் என்றில்லாமல், 22 வெவ்வேறு விளையாட்டுகளில் நமது இந்திய வீரர்கள் ஆசிய அளவில் சாதனை படைத்திருக்கிறார்கள். ஆண்கள் மட்டுமல்லாமல் அவர்களுக்கு நிகராக வீராங்கனைகளும் பதக்க எண்ணிக்கைக்குப் பங்களிப்பு நல்கி இருக்கிறார்கள்.

நமது பதக்கப் பட்டியலில், தடகளம், துப்பாக்கி சுடுதல், வில்வித்தை ஆகிய மூன்றும் முறையே 29, 22, 9 பதக்கங்களைப் பெற்றுத் தந்திருக்கின்றன. தடகளத்தில் ஆறு தங்கப்பதக்கம் உள்பட 29, துப்பாக்கி சுடுதலில் ஏழு தங்கம் உள்பட 22, வில்வித்தையில் ஐந்து தங்கத்துடன் 9 என்று மொத்தப் பதக்க எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்டவை கிடைத்திருக்கின்றன.

ஹாங்செளவில் நடந்த 15 நாள் போட்டிகளில், ஏதோ நாங்களும் கலந்துகொண்டோம் என்பதாக அல்லாமல், ஒவ்வொரு நாளும் இந்திய வீரர்கள் தொடர்ந்து சாதனைகளைப் படைத்து வந்ததை உலக நாடுகள் வியப்புடன் பார்த்தன. அதுமட்டுமல்ல, தனிநபர் சாதனைகளைப் போலவே, குழு விளையாட்டுகளிலும் இந்தியாவின் முன்னேற்றம் வெளிப்பட்டது. கபடி, கிரிக்கெட், ஹாக்கி போன்ற குழு விளையாட்டுகளிலும், அணி விளையாட்டுகளிலும் 22 பதக்கங்கள் பெறப்பட்டிருக்கின்றன.

பாட்மின்டன் இரட்டையர் ஆட்டத்தில் சாத்விக் ரங்கிரெட்டி - சிராக் ஷெட்டி; டேபிள் டென்னிஸ் மகளிர் இரட்டையர் ஆட்டத்தில் சுதிர்தா - அஹிகா முகர்ஜி ஆகியோர் பெற்ற வெற்றிகள் குறிப்பிடத்தக்கவை. வெள்ளிப் பதக்கங்களை வென்ற இந்திய ஆடவர், மகளிர் செஸ் அணிகள், வில்வித்தையில் தனித்திறமை காட்டி தங்கம் வென்ற ஓஜாஸ் பிரவீன், ஜோதி, வெள்ளிப் பதக்கம் வென்ற அபிஷேக், அதிதி ஆகியோர் கவனம் ஈர்த்தவர்கள்.

சில பின்னடைவுகள் இல்லாமல் இல்லை. முந்தைய ஜகார்த்தா போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற குத்துச் சண்டையிலும், மல்யுத்தத்திலும் இந்த முறை முதலிடம் பிடிக்காமல் போனது துரதிருஷ்டம் என்றுதான் கூற வேண்டும். தடகளத்தில், கடந்த முறை எட்டு தங்கம் வென்றதுபோல இந்த முறை எட்ட முடியாததும் குறைதான். அருணாசல பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று வுஷு போட்டியாளர்களுக்கு சீனா நுழைவு அனுமதி வழங்க மறுத்துவிட்டதால், அவர்கள் பங்கேற்க முடியாதது இன்னொரு சோகம்.

38 விளையாட்டுப் பிரிவுகளைச் சேர்ந்த 634 விளையாட்டு வீரர்கள் இந்தியாவின் சார்பில் ஹாங்செள ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றனர் என்பதுதான் வெளி உலகுக்குத் தெரியும். இதற்குப் பின்னால், கடந்த ஐந்து ஆண்டுகளாக, மத்திய அரசின் விளையாட்டு அமைச்சகம் எடுத்துவரும் முயற்சிகள் வெளியில் பேசப்படுவதில்லை. இந்தியாவின் பொருளாதார வலிமைக்கு ஏற்ப, விளையாட்டுத் துறையிலும் வல்லரசுகள்போல நாம் சாதனை படைத்தாக வேண்டும் என்கிற முனைப்பு காட்டப்பட்டது என்பது தான் உண்மை.

'ஒலிம்பிக் பதக்க மேடை இலக்கு திட்டம்' இந்திய விளையாட்டு ஆணையத்தால் முன்னெடுக்கப்படுகிறது. திறமைசாலிகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நிதியுதவியும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சர்வதேச அளவிலான பயிற்சியாளர்களின் மேற்பார்வையில் அவர்கள் ஒப்படைக்கப்படுகிறார்கள். மேலை நாடுகளைப்போல, விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு, பயிற்சி அளித்து சர்வதேச விளையாட்டு அரங்குகளில் பதக்கங்களைக் குவிப்பதில் முனைப்புக் காட்டப்படுகிறது. மாநில அரசுகளின் பங்களிப்பையும் குறைத்து மதிப்பிடக் கூடாது.

முந்தைய டோக்கியோ ஒலிம்பிக்ஸ், 2022 காமன்வெல்த் போட்டிகள், சில மாதங்களுக்கு முன்னர் நடந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் தொடங்கிய முனைப்பின் விளைவுதான், இப்போதைய ஹாங்செள ஆசிய விளையாட்டுப் போட்டியின் வெற்றிகள் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. மூன்றிலக்கப் பதக்க சாதனையுடன் இந்திய விளையாட்டு வீரர்கள் அடுத்த பத்து மாதங்களில் பாரீஸ் ஒலிம்பிக் போட்டியை எதிர்கொள்ள இருக்கிறார்கள்.

விண்வெளியில் சாதனைகள் படைப்பது போலவே, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும் இந்தியா சாதனை படைக்கத் தொடங்கியிருக்கும் பெருமிதக் தருணம் இது!

# திருமணமான பெண்ணின் 26 வார கருவைக் கலைக்க அனுமதி கோரிய மனு: உச்சநீதிமன்றம் தள்ளுபடி

**புது தில்லி, அக்.16:** திருமணமான பெண்ணின் 26 வார கருவைக் கலைக்க அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மருத்துவக் கருக்கலைப்புச் சட்டம் 1971-இன் கீழ் அதிகபட்சமாக 24 வார கருவை மட்டுமே மருத்துவ நடைமுறையின் கீழ் கலைப்பதற்கு அனுமதிக்க முடியும்.

இந்தச் சூழலில், 'தனக்கு ஏற்கெனவே 2 குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில், உணர்வு ரீதியாகவும், நிதிநிலை ரீதியிலும், மன ரீதியிலும் மூன்றாவது குழந்தையை வளர்க்கும் சூழ்நிலை இல்லை. கடுமையான மன அழுத்தத்துக்கும் உள்ளாகியுள்ளேன். எனவே, மூன்றாவது முறையாக உருவாகியிருக்கும் கருவைக் கலைக்க அனுமதிக்க வேண்டும்' என்று மனுதாரர் தனது மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனுவை கடந்த 9-ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஹிமா கோலி, பி.வி.நாகரத்தினா ஆகியோர் அடங்கிய அமர்வு, அந்தப் பெண்ணின் கருவைக் கலைக்க அனுமதித்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவு தொடர்பாக உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன் கடந்த 10-ஆம் தேதி முறையீடு செய்த சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டீ, 'கருக்கலைப்பின்போது கரு உயிருடன் பிறப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, கருக்கலைப்பின்போது கருவைக் கொலை செய்யவேண்டியிருக்கும்' என்று மருத்துவ வாரியம் பரிந்துரை செய்துள்ளபோதிலும், கருக்கலைப்புக்கு அனுமதித்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்' என்று குறிப்பிட்டார்.



இதைக் கேட்ட நீதிபதிகள் அமர்வு, பெண்ணின் கருவைக் கலைப்பதை நிறுத்திவைக்குமாறு தில்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு உத்தரவிட்டனர்.

இதனிடையே, கருக்கலைப்பை அனுமதித்து பிறப்பித்த உத்தரவைத் திரும்பப் பெற வலியுறுத்தி மத்திய அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு அதே அமர்வு முன்பாக கடந்த புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, 'மனுதாரரின் கருவைக் கலைக்க அனுமதிப்பதில் தனக்கு உடன்பாடு இல்லை' என்று நீதிபதி ஹிமா கோலி குறிப்பிட்டார்.

ஆனால், மத்திய அரசின் மனுவைத் தள்ளுபடி செய்த நீதிபதி நாகரத்தினா, 'நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னரே கருவைக் கலைக்க அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது' என்றார்.

இதன் காரணமாக, மத்திய அரசின் மனு மீதான விசாரணை வேறு அமர்வுக்கு மாற்றப்படுவதற்காக, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

அதன்படி, இந்த மனு தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள், 'கரு வளர்ச்சி 24 வாரங்களைக் கடந்துவிட்டது. அதாவது 26 வாரங்கள் 5 நாள்கள் ஆகிவிட்டன. எனவே, கருக்கலைப்புக்கு அனுமதிக்க முடியாது' என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## ககன்யான் திட்டம்

# முதல் சோதனை ஏவுதலை வரும் 21–இல் மேற்கொள்ளும் இஸ்ரோ

**பெங்களூரு, அக்.16:** 'ககன்யான் விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டுவரும் திட்டத்தின் முதல்கட்ட சோதனை வரும் சனிக்கிழமை (அக். 21) மேற்கொள்ளப்படும்' என இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) அதிகாரபூர்வமாக திங்கள்கிழமை அறிவித்தது.

மனிதர்களை விண்கலம் மூலம் பூமியின் சுற்றுவட்டப் பாதையின் 400 கி.மீ. தொலைவுக்கு கொண்டுசென்று, பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டுவரும் ககன்யான் திட்டம் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான பல்வேறுகட்ட சோதனைகளை இஸ்ரோ மேற்கொள்ளவிருக்கிறது.

இதில், முதல்கட்ட சோதனை வரும் 21-ஆம் தேதி மேற்கொள்ளப்பட உள்ளது.

இதுகுறித்து 'எக்ஸ்' வலைதளத்தில் இஸ்ரோ வெளியிட்ட பதிவில், 'விண்ணுக்கு மனிதர்களைத் தாங்கிச் செல்லும் விண்கலத்துடன் 'டிவி-டி1' ராக்கெட் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவன் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து வரும் 21-ம் தேதி காலை 7 முதல் 9 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் சோதனை அடிப்படையில் ஏவப்பட உள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இதுகுறித்து இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் கடந்த சனிக்கிழமை கூறுகையில், 'டிவி-டி1 ராக்கெட் முதல்கட்ட சோதனைக்குப் பிறகு, தொடர்ந்து 3 முறை ஏவப்பட்டு சோதிக்கப்படும்.

அதாவது சனிக்கிழமை மேற்கொள்ளப்படும் டி1 சோதனைக்குப் பின்னர், டி2, டி3, டி4 ராக்கெட் சோதனைகள் மேற்கொள்ளப்படும்' என்றார்.

இந்தச் சோதனையில், விண்கலத்தை விண்ணுக்கு ஏந்திச் செல்லும் ராக்கெட், பூமியிலிருந்து 17 கி.மீ. உயரத்தில் விண்கலத்தை விடுவிக்கும். பின்னர் அது பாராசூட் உதவியுடன் வங்காள விரிகுடாவில் பூமிக்குத் திரும்பும். பின்னர் கடலிலிருந்து விண்கலம் மீட்கப்படும்.

விண்கலம் விண்ணை நோக்கிப் பயணிக்கும்போது ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அதிலிருந்து வீரர்கள் வெளியேறுவதற்கான சோதனையும் நடத்தப்பட உள்ளது.